செ.வெ.எண்:36 நாள்:18.09.2017

# நாகப்பட்டினம் மாவட்டம்

## நாகப்பட்டினம் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளி 2018 விற்பனையினை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப அவர்கள் துவக்கி வைத்தார்.

நாகப்பட்டிணம் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளி 2018 விற்பனையினை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.

தீபாவளி 2018 விற்பனையினை துவக்கி வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

“பாரம்பரியமிக்க கைத்தறி கூட்டுறவு நிறுவனமான கோ-ஆப்டெக்ஸ் 83 ஆண்டுகளுக்கும் மேலாக கைத்தறி நெசவாளர்களின் முன்னேற்றத்திற்காகவும், வாடிக்கையாளர்களின் ரசனைக்கேற்றவாறு துணிகளை உற்பத்தி செய்து வினியோகம் செய்து வருகின்றது. வாடிக்கையாளர்களின் ஏகோபித்த ஆதரவுடன் கடலூர் மண்டலம் ரூ.106.19 இலட்சம் அதிகம் விற்பனை செய்து சாதனை படைத்துள்ளது. அதைப்போலவே இந்தாண்டும் தீபாவளி பண்டிகைக்கு தங்களின் மேலான ஆதரவை கோருகின்றது. கடலூர் மண்டலத்தில் தீபாவளி 2018 விற்பனை குறியீடாக ரூ.1350.00 இலட்சமும், நாகப்பட்டினம் விற்பனை நிலையத்திற்கு ரூ.66.00 இலட்சம் விற்பனை குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2017-18-ஆம் ஆண்டில் ரூ.113.09 இலட்சம் விற்பனை புரிந்திட்ட நாகப்பட்டினம் விற்பனை நிலையம் நடப்பு ஆண்டில் மேலும் விற்பனையைப் பெருக்க பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

தீபாவளி 2018 பண்டிகை விற்பனைக்காக புதிய இரகங்களாக காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள், சேலம் பட்டு சேலைகள், மென்பட்டு சேலைகள், கோரா காட்டன் சேலைகள, மீரட் போர்வைகள் சுடிதார் மெட்டீரியல்ஸ், சிறுமுகை, அருப்புக்கோட்டை, பரமக்குடி, உறையூர், சேலம் பருத்தி சேலைகள், ஜமுக்காளம், போர்வைகள், தலையணை உறைகள், திரைச்சீலைகள், துண்டு இரகங்கள் மற்றும் இயற்கை சாயமிட்ட பட்டு சேலைகள், ரெடிமேட் சட்டைகள், மாப்பிள்ளை செட் என ஏராளமாக வரவழைக்கப்பட்டுள்ளன. மேலும் மெத்தை, தலையணை, கால் மிதியடிகள், நைட்டீஸ் மற்றும் உள்பாவாடைகள் எராளமாக வரவழைக்கப்பட்டுள்ளன. தீபாவளி பண்டிகைக்காக தமிழக அரசு வழங்கும் 30 சிறப்பு தள்ளுபடியும் வழங்கப்படுகிறது.

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், பொதுத்துறை ஊழியர்கள், உள்ளாட்சித் துறை பணியாளர்கள், ஆகியோருக்கு கோ-ஆப்டெக்ஸ் வட்டியில்லா சுலப கடன் வசதி அளிக்கிறது. இந்த அரிய வாய்ப்பினை அனைவரும் பயன்படுத்தி கோ-ஆப்டெக்ஸ் ஆடைகளை அணிந்து மகிழ கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சமீப காலங்களில் கோ-ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்திய கனவு நனவு திட்டம் வாடிக்கையாளர்களிடையே பெரும் வரவேற்பினை பெற்றுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வாடிக்கையாளர்கள் மாதந்தோறும் ரூ.300 முதல் ரூ.5000 வரை 11 மாதங்கள் செலுத்தி வந்தால் 12-வது மாத தவணையை கோ-ஆப்டெக்ஸ் செலுத்துவதுடன் 12-வது மாத முடிவில் அவர்கள் சேமிப்புடன் கூடுதலாக கைத்தறி மற்றும் பட்டு ரகங்களை வாங்கிக் கொள்ளலாம். இந்த சிறப்பு சலுகைகளை பெற்று பொதுமக்கள் அனைவரும் பயன்பெற வேண்டும்.” என தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தீபாவளி 2017 மற்றும் பொங்கல் 2018 பண்டிகை கால சிறப்பு விற்பனையில் தங்க மழை பரிசுத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட வாடிக்கையாளர்கள் 4 பேருக்கு தங்க நாணயப் பரிசுகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவில் நாகப்பட்டினம் சார் ஆட்சியர் திரு.கமல்கிஷோர்,இ.ஆ.ப, கோ-ஆப்டெக்ஸ் கடலூர் மண்டல முதுநிலை மண்டல மேலாளர் திரு.அ.கோபால், துணை மண்டல மேலாளர் திரு.பெ.ஸ்டாலின், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மீ.செல்வகுமார், நாகப்பட்டினம் வட்டாட்சியர் திரு,இளங்கோவன், கோஆப்டெக்ஸ் நாகப்பட்டினம் விற்பனை நிலைய மேலாளர் திரு.ராஜாராமன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**